U.S. CURRENCY
EDUCATION PROGRAM

# டெல்லர் டூல்கிட்



## உண்மையான டாலர் நோட்டை அடையாளம் காண ஒரு வழிகாட்டி

# டெல்லர் டூல்கிட் என்பது என்ன?

## நாங்கள் யார்

ஃபெடரல் ரிசர்வ் வங்கி வாரியத்தால் (Federal Reserve Board) மேலாண்மை செய்யப்படும் அமெரிக்க நாணயக் கல்வித் திட்டம் (U.S. Currency Education Program), பொதுமக்களுக்குத் தகவல் மற்றும் பயிற்சி வளங்களை வழங்குவதன் மூலம் அமெரிக்க டாலரின் முழுமைத்தன்மையையும் அதன் மீதான நம்பிக்கையையும் உறுதிப்படுத்துகிறது. நாங்கள் பிற முகமைகளில் உள்ள எங்கள் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி அமெரிக்க டாலர் மீதான உலகளாவிய ரொக்கப் பயனர்களின் நம்பிக்கையைப் பேணுகிறோம்.

## இது எதற்காக

2021-இல் பிரசுரிக்கப்பட்ட இந்த வழிகாட்டி, ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு எப்படிச் சான்றளிப்பது என்று தெரிந்துகொள்ளும் தேவை உள்ள காசாளர்களுக்கு (மற்றும் பிற தொழில்முறை வல்லுநர்களுக்கு) உரிய ஒரு பயிற்சி வளமாகும். டாலர் நோட்டு உண்மையானதா என்று தீர்மானிக்கப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தலாம். காசாளர்கள் ஒரு கள்ள நோட்டைப் பார்த்திருப்பதாக சந்தேகப்பட்டால், அவர்கள் தங்கள் நிறுவனத்தின் கள்ளநாணயத் தெரிவிப்புச் செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டும் அல்லது தங்கள் மேலாளருக்கு **uscurrency.gov/report-counterfeit என்ற வலைப்பக்கத்தில் உள்ள கள்ளநாணயத் தெரிவிப்புச் செயல்குறிப்புகளை அளிக்க வேண்டும்.**

## விரைவு வழிகாட்டிகள்

இந்த டூல்கிட்டின் முடிவில் உள்ள எங்கள் குறிப்புதவி அட்டைகளை வெட்டி எடுத்து, காசாளர்களின் பணியிடங்களில் வைத்திருங்கள் அல்லது எதிர்காலத்தில் எடுத்துப் பார்க்க வைத்துக்கொள்ளுங்கள்.

→ **அமெரிக்க நோட்டுக்குச் சான்றளிப்பது குறித்த விரைவு வழிகாட்டலுக்கு விரைவுக் குறிப்புதவி அட்டையை வெட்டி எடுங்கள்.**

## நாங்கள் என்ன செய்கிறோம்



ஃபெடரல் ரிசர்வ் வங்கி (Federal Reserve) நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றிக் காசாளர்களுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் கல்வியளிக்கிறோம்.



உண்மையான அமெரிக்க டாலர் நோட்டுகளை அடையாளம் கண்டு சான்றளிப்பதில் காசாளர்களுக்குப் பயிற்சியும் கல்வியும் அளிப்பதற்கான இலவச வளங்களை வழங்குகிறோம்.



# இந்த நோட்டு செல்லுமா?


**எல்லா அமெரிக்க நோட்டும், அது எப்போது வெளியிடப்பட்டிருந்தாலும் சட்டமுறைப் பணச்செலுத்தப் பத்திரமாகும் (LEGAL TENDER).**

### குறிப்பிட்ட மதிப்புள்ள நோட்டுகளைப் பற்றிக் காசாளர்களுக்கான விவரங்கள்


அமெரிக்க அரசானது டாலர் நோட்டுகளின் பாதுகாப்பை மேம்படுத்த நோட்டை மீள்வடிவமைக்கிறது. ஆனால் உங்கள் பழைய வடிவமைப்புள்ள நோட்டுகளைக் கொடுத்துப் புதிய நோட்டுகளைப் பெறத் தேவையில்லை. எல்லா அமெரிக்க நோட்டும், அது எப்போது வெளியிடப்பட்டிருந்தாலும் சட்டமுறைப் பணச்செலுத்தப் பத்திரமாகும் (legal tender). ஒரு நோட்டின் பாதுகாப்பு அம்சங்கள் தொழில்நுட்ப ரீதியாக எவ்வளவு மேம்பட்டவையாக இருந்தாலும், நீங்கள் செய்யும் உதவிதான் கள்ளநாணயம் செய்வதற்கு எதிரான சிறந்த தற்காப்பாக இருந்துவருகிறது.



## $100 நோட்டு →



## $50 நோட்டு →



## $20 நோட்டு →



## $10 நோட்டு →



## $5 நோட்டு →

மேலும் தகவலுக்கு, **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

# அதன் அம்சங்களை அறியுங்கள். அது உண்மை என்று நம்புங்கள்.

# $100 நோட்டு

**$100 நோட்டில் இரண்டு தனித்துவமான மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் அடங்கியுள்ளன** – 3-D பாதுகாப்பு நாடா, மைப்புட்டியில் உள்ள நிறம் மாறும் மணி. 2013-இல் வெளியிடப்பட்டது.

**பழைய வடிவமைப்புள்ள $100 நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்:**

→ 1996-2013
→ 1990-1996
→ 1914-1990




### A 3-D பாதுகாப்பு நாடா

3-D பாதுகாப்பு நாடா நீல நிறமானது, அதில் மணிகள் மற்றும் 100-களின் படங்கள் உள்ளன. நீங்கள் நோட்டை முன்னும் பின்னும் சாய்த்துப் பார்த்தால் மணிகள் 100-களாக மாறுகின்றன, பக்கவாட்டில் இடமும் வலமும் அசைகின்றன. நீங்கள் நோட்டைப் பக்கவாட்டில் இடமும் வலமும் சாய்த்துப் பார்த்தால் மணிகள் 100-களாக மாறுகின்றன, மேலும் கீழுமாக அசைகின்றன. 3-D பாதுகாப்பு நாடா தாளோடு சேர்த்து நெய்யப்பட்டுள்ளது, தாளின் மேல் அச்சிடப்படவில்லை.

### B மைப்புட்டியில் உள்ள மணி

நோட்டை சாய்த்துப் பார்த்தால் தாமிர மைப்புட்டியில் உள்ள நிறம் மாறும் மணியானது தாமிரத்திலிருந்து பச்சை நிறத்திற்கு மாறுகிறது. இந்த விளைவு, இந்த மணி மைப்புட்டிக்குள் மாறிமாறித் தோன்றி மறையச் செய்கிறது.

### C உருவப்பட நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள காலி இடத்தில் பெஞ்சமின் ஃப்ராங்க்ளினின் மெல்லிய படம் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

### D நிறம் மாறும் மை

நோட்டை சாய்த்துப் பார்த்தால் நோட்டின் முன்பக்கத்தில் கீழ் வலது மூலையில் உள்ள 100 என்ற எண் தாமிரத்திலிருந்து பச்சை நிறத்திற்கு மாறுவதைப் பார்க்கலாம்.

### E பாதுகாப்பு நூல்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்துப் பார்த்தால், உருவப்படத்தின் இடப்பக்கம் செங்குத்தாக ஒரு நூல் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நூலில் USA என்ற எழுத்துக்களும் 100 என்ற எண்ணும் மாறிமாறித் தோன்றும் விதமாக அச்சிடப்பட்டுள்ளன, இது நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது. அகஊதா ஒளியில் இந்த நூல் இளஞ்சிவப்பு நிறத்தில் மின்னுகிறது.

பிற பாதுகாப்பு அம்சங்கள்

### உயர்த்தப்பட்ட அச்சாக்கம்

உங்கள் விரலை நோட்டின் இடப்பக்கத்தில் பெஞ்சமின் ஃப்ராங்க்ளினின் தோள் மீது மேலும் கீழும் நகர்த்துங்கள். தொட்டால் சொரசொரப்பாக இருக்கும். இது படத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட மேம்பட்ட இன்டாலியோ அச்சாக்க நிகழ்முறையின் விளைவாகும். மரபார்ந்த உயர்த்தப்பட்ட அச்சாக்கத்தை $100 நோட்டு முழுவதும் தொட்டு உணரலாம். இது ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு அவற்றின் தனித்துவமான பரப்பமைப்பை அளிக்கிறது.

### நுண் அச்சாக்கம்

கவனமாகப் பார்த்தால் (பெரிதாக்கிப் பார்க்க வேண்டியிருக்கலாம்) பெஞ்சமின் ஃப்ராங்க்ளினின் ஜாக்கெட் காலரில் THE UNITED STATES OF AMERICA, உருவப்பட நீரோட்டக்குறியைக் கொண்ட காலி இடத்தைச் சுற்றி USA 100, பொன் இறகோடு ONE HUNDRED USA, நோட்டின் ஓரங்களில் சிறிய 100-கள் ஆகிய சிறிய அச்சிட்ட உரைகளைக் காணலாம்.

மேலும் தகவலுக்கு, **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள்.


# அதன் அம்சங்களை அறியுங்கள்.
# அது உண்மை என்று நம்புங்கள்.

# $50 நோட்டு

**$50 நோட்டில் சோதித்துப் பார்க்க எளிதாக மூன்று முக்கிய பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன** – ஒரு பாதுகாப்பு நூல், உருவப்பட நீரோட்டக்குறி, நிறம் மாறும் 50 என்ற எண். 2004-இல் வெளியிடப்பட்டது.

பழைய வடிவமைப்புள்ள $50 நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்:

→ 1997-2004
→ 1990-1997
→ 1914-1990




## A பாதுகாப்பு நூல்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்துப் பார்த்தால், உருவப்படத்தின் வலப்பக்கத்தில் செங்குத்தாக ஒரு நூல் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நூலில் USA 50 என்ற உரையும் ஒரு சிறு கொடியும் மாறிமாறித் தோன்றும் விதமாக அச்சிடப்பட்டுள்ளன, இது நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது. அகஊதா ஒளியில் இந்த நூல் மஞ்சள் நிறத்தில் மின்னுகிறது.

## B உருவப்பட நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள காலி இடத்தில் குடியரசுத் தலைவர் கிரான்ட்டின் மெல்லிய படம் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

## C நிறம் மாறும் மை

நோட்டை சாய்த்துப் பார்த்தால் நோட்டின் முன்பக்கத்தில் கீழ் வலது மூலையில் உள்ள 50 என்ற எண் தாமிரத்திலிருந்து பச்சை நிறத்திற்கு மாறுவதைப் பார்க்கலாம்.

பிற பாதுகாப்பு அம்சங்கள்

## உயர்த்தப்பட்ட அச்சாக்கம்

உங்கள் விரலை நோட்டின் பரப்பின் மேல் வைத்து நகர்த்தினால் உயர்த்தப்பட்ட அச்சாக்கத்தை உணரலாம். இது உண்மையான ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு அவற்றின் தனித்துவமான பரப்பமைப்பை அளிக்கிறது.

## நுண் அச்சாக்கம்

கவனமாகப் பார்த்தால் (பெரிதாக்கிப் பார்க்க வேண்டியிருக்கலாம்) உருவப்படத்தின் இடப்பக்கம் உள்ள நீல நிற நட்சத்திரங்களில் இரண்டுக்குள் FIFTY, USA, 50 என்ற சிறிய அச்சிட்ட உரைகளையும், நோட்டின் இருபக்க ஓரங்களிலும் FIFTY என்பது பல முறை அச்சிடப்பட்டிருப்பதையும், குடியரசுத் தலைவர் கிரான்ட்டின் காலரில் THE UNITED STATES OF AMERICA என்று அச்சிடப்பட்டிருப்பதையும் பார்க்கலாம்.

# அதன் அம்சங்களை அறியுங்கள். அது உண்மை என்று நம்புங்கள்.

# $20 நோட்டு

**$20 நோட்டில் சோதித்துப் பார்க்க எளிதாக மூன்று முக்கிய பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன** – ஒரு பாதுகாப்பு நூல், உருவப்பட நீரோட்டக்குறி, நிறம் மாறும் 20 என்ற எண். 2003-இல் வெளியிடப்பட்டது.

பழைய வடிவமைப்புள்ள $20 நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்:

- → 1998-2003
- → 1990-1998
- → 1914-1990




### A பாதுகாப்பு நூல்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்துப் பார்த்தால், உருவப்படத்தின் இடப்பக்கம் செங்குத்தாக ஒரு நூல் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நூலில் USA TWENTY என்ற உரையும் ஒரு சிறு கொடியும் மாறிமாறித் தோன்றும் விதமாக அச்சிடப்பட்டுள்ளன, இது நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது. அகஊதா ஒளியில் இந்த நூல் பச்சை நிறத்தில் மின்னுகிறது.

### B உருவப்பட நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள காலி இடத்தில் குடியரசுத் தலைவர் ஜாக்சனின் மெல்லிய படம் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

### C நிறம் மாறும் மை

நோட்டை சாய்த்துப் பார்த்தால் நோட்டின் முன்பக்கத்தில் கீழ் வலது மூலையில் உள்ள 20 என்ற எண் தாமிரத்திலிருந்து பச்சை நிறத்திற்கு மாறுவதைப் பார்க்கலாம்.

பிற பாதுகாப்பு அம்சங்கள்

### உயர்த்தப்பட்ட அச்சாக்கம்

உங்கள் விரலை நோட்டின் பரப்பின் மேல் வைத்து நகர்த்தினால் உயர்த்தப்பட்ட அச்சாக்கத்தை உணரலாம். இது உண்மையான ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு அவற்றின் தனித்துவமான பரப்பமைப்பை அளிக்கிறது.

### நுண் அச்சாக்கம்

கவனமாகப் பார்த்தால் (பெரிதாக்கிப் பார்க்க வேண்டியிருக்கலாம்) உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள நீல நிற TWENTY USA பட்டையின் முதல் மூன்று எழுத்துக்களின் ஓரத்தில் USA20 என்றும், பொருளாளரின் கையொப்பத்திற்குக் கீழ் உள்ள ஓரத்தில் கருப்பு நிறத்தில் THE UNITED STATES OF AMERICA 20 USA 20 என்றும் சிறிய அச்சிட்ட உரைகளைக் காணலாம்.


# அதன் அம்சங்களை அறியுங்கள். அது உண்மை என்று நம்புங்கள்.

## $10 நோட்டு

**$10 நோட்டில் சோதித்துப் பார்க்க எளிதாக மூன்று முக்கிய பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன** – ஒரு பாதுகாப்பு நூல், உருவப்பட நீரோட்டக்குறி, நிறம் மாறும் 10 என்ற எண். 2006-இல் வெளியிடப்பட்டது.

பழைய வடிவமைப்புள்ள $10 நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்:

- → 2000-2006
- → 1990-2000
- → 1914-1990




### A பாதுகாப்பு நூல்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்துப் பார்த்தால், உருவப்படத்தின் வலப்பக்கத்தில் செங்குத்தாக ஒரு நூல் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நூலில் USA TEN என்ற உரையும் ஒரு சிறு கொடியும் மாறிமாறித் தோன்றும் விதமாக அச்சிடப்பட்டுள்ளன, இது நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது. அகஊதா ஒளி பாய்ச்சப்படும்போது இந்த நூல் ஆரஞ்சு நிறத்தில் மின்னுகிறது.

### B உருவப்பட நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள காலி இடத்தில் செயலாளர் ஹாமில்டனின் மெல்லிய படம் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

### C நிறம் மாறும் மை

நோட்டை சாய்த்துப் பார்த்தால் நோட்டின் முன்பக்கத்தில் கீழ் வலது மூலையில் உள்ள 10 என்ற எண் தாமிரத்திலிருந்து பச்சை நிறத்திற்கு மாறுவதைப் பார்க்கலாம்.

பிற பாதுகாப்பு அம்சங்கள்

### உயர்த்தப்பட்ட அச்சாக்கம்

உங்கள் விரலை நோட்டின் பரப்பின் மேல் வைத்து நகர்த்தினால் உயர்த்தப்பட்ட அச்சாக்கத்தை உணரலாம். இது உண்மையான ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு அவற்றின் தனித்துவமான பரப்பமைப்பை அளிக்கிறது.

### நுண் அச்சாக்கம்

கவனமாகப் பார்த்தால் (பெரிதாக்கிப் பார்க்க வேண்டியிருக்கலாம்) உருவப்படத்திற்குக் கீழும் நோட்டின் ஓரங்களுக்கு உள்ளேயும் THE UNITED STATES OF AMERICA, TEN DOLLARS USA என்ற சிறிய அச்சிட்ட உரைகளையும் தீப்பந்தத்திற்குக் கீழ் USA 10 என்பது பல முறை அச்சிடப்பட்டிருப்பதையும் பார்க்கலாம்.

# அதன் அம்சங்களை அறியுங்கள். அது உண்மை என்று நம்புங்கள்.

# $5 நோட்டு

**$5 நோட்டில் சோதித்துப் பார்க்க எளிதாக மூன்று முக்கிய பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன** – சிறிய அளவில் மூன்று எண் 5 நீரோட்டக்குறிகளால் ஆன ஒரு தூண், பாதுகாப்பு நூல், பெரிய அளவில் எண் 5-இன் நீரோட்டக்குறி. 2008-இல் வெளியிடப்பட்டது.

பழைய வடிவமைப்புள்ள $5 நோட்டுகளின் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பு அம்சங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்:

- → 2000-2008
- → 1993-2000
- → 1914-1993




### A சிறிய அளவில் எண் 5-இன் நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் இடப்பக்கத்தில் மூன்று எண் 5-களின் படம் மெலிதாகத் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

### B பாதுகாப்பு நூல்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்துப் பார்த்தால், உருவப்படத்தின் வலப்பக்கத்தில் செங்குத்தாக ஒரு நூல் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நூலில் USA என்ற எழுத்துக்களும் 5 என்ற எண்ணும் மாறிமாறித் தோன்றும் விதமாக அச்சிடப்பட்டுள்ளன, இது நோட்டின் இரு பக்கங்களிலம் தெரிகிறது. அகஊதா ஒளியில் இந்த நூல் நீல நிறத்தில் மின்னுகிறது.

### C பெரிய அளவில் எண் 5-இன் நீரோட்டக்குறி

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, உருவப்படத்தின் வலப்பக்கம் உள்ள காலி இடத்தில் ஒரு பெரிய எண் 5-இன் மெல்லிய படம் தெரிகிறதா என்று பாருங்கள். இந்தப் படம் நோட்டின் இரு பக்கங்களிலும் தெரிகிறது.

பிற பாதுகாப்பு அம்சங்கள்

### உயர்த்தப்பட்ட அச்சாக்கம்

உங்கள் விரலை நோட்டின் பரப்பின் மேல் வைத்து நகர்த்தினால் உயர்த்தப்பட்ட அச்சாக்கத்தை உணரலாம். இது உண்மையான ஃபெடரல் ரிசர்வ் வங்கி நோட்டுகளுக்கு அவற்றின் தனித்துவமான பரப்பமைப்பை அளிக்கிறது.

### நுண் அச்சாக்கம்


கவனமாகப் பார்த்தால் (பெரிதாக்கிப் பார்க்க வேண்டியிருக்கலாம்) நோட்டின் இடப்பக்க மற்றும் வலப்பக்க ஓரங்களில் FIVE DOLLARS என்ற உரை சிறிதாகப் பல முறை அச்சிடப்பட்டிருப்பதையும், பெரிய முத்திரைக்குள் இருக்கும் கேடயத்தின் மேற்பகுதியில் E PLURIBUS UNUM என்று அச்சிடப்பட்டிருப்பதையும், கேடயத்தின் தூண்களுக்கு இடையே USA என்று பல முறை அச்சிடப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். நோட்டின் பின்பக்கத்தில் கருஞ்சிவப்பு நிறத்திலுள்ள பெரிய எண் 5-இன் ஒரு விளிம்பில் USA FIVE என்ற உரை தோன்றுகிறது.

# எளிதாகக் கண்டுபிடிக்கத்தக்க கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிக்க உதவிக்குறிப்புகள்

## நீங்கள் நோட்டைப் பெறும்போது விரைவாக ஒரு பார்வை பாருங்கள்.




அதில் வெளிநாட்டுக் கையெழுத்து இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.




அதில் “For Motion Picture Use Only” (திரைப்படப் பயன்பாட்டுக்கு மட்டுமே) என இருந்தால் அல்லது “Replica” (நகல்) என்ற சொல் இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.

ஒரு நோட்டு உண்மையானதா என்று தீர்மானிக்கச் சிறந்த வழி, அதன் பாதுகாப்பு அம்சங்களை நம்பியிருப்பதுதான். நீங்கள் ஒரு கள்ள நோட்டைப் பெற்றிருப்பதாக நினைத்தால், உங்கள் அமைப்பின் கள்ளநாணயத் தெரிவிப்புச் செயல்முறைகளைப் பின்பற்றுங்கள், பின்பு உங்கள் மிக அருகில் உள்ள அமெரிக்க உளவு அமைப்பு (U.S. Secret Service) கள அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துங்கள்.

## கூடுதல் காசாளர் வளங்கள்




### பயிற்சிப் பாடவகுப்பு

அமெரிக்க டாலர் நோட்டில் உள்ள பாதுகாப்பு அம்சங்களைக் காசாளர்கள் கற்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட எங்கள் இணையவழி பயிற்சி வகுப்பைப் பெறுங்கள். நீங்கள் எவ்வளவு அதிகம் அறிந்திருக்கிறீர்களோ அந்த அளவுக்குக் குறைவாகக் கள்ள நோட்டுகளை ஏற்பீர்கள்.





### Cash Assist செல்பேசிச் செயலி

Cash Assist-இன் பல கருவிகளைக் கொண்டு நீங்கள் உங்கள் கையில் இருக்கும் ரொக்கத்தின் பாதுகாப்பு அம்சங்களை விரைவாகக் கண்டுபிடித்துப் புரிந்துகொள்ளலாம். உங்கள் செல்பேசியின் காமிரா, ஆக்செலரோமீட்டர், மற்றும் பிற வசதிகளைப் பயன்படுத்தி முடிவுகளை மேற்கொள்ளுங்கள்.




### அமெரிக்க நாணயக் கல்வி வலைத்தளம்

நடப்பு மற்றும் பழைய பாணி அமெரிக்க நோட்டுகளுக்குச் சான்றளிப்பது பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும் பயிற்சி வளங்களுக்கும் **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை புரியுங்கள்.




### ஒரு கள்ள நோட்டைத் தெரிவித்தல்


கள்ளநாணயத்தை எப்படித் தெரிவிப்பது என்பது பற்றி மேலும் தகவல் அறிய **uscurrency.gov/report-counterfeit** என்ற வலைத்தளத்திற்கு வருகை புரியுங்கள்.

இந்தக் குறிப்புதவி அட்டையை வெட்டி எடுத்து நடுவில் மடியுங்கள், அமெரிக்க டாலர் நோட்டுக்குச் சான்றளிப்பது குறித்த ஒரு விரைவு வழிகாட்டலுக்கு அதைப் பயன்படுத்த அருகில் வைத்திருங்கள்.




அதன் அம்சங்களை அறியுங்கள்.
அது உண்மை என்று நம்புங்கள்.

U.S. CURRENCY EDUCATION PROGRAM



### தாளைத் தொட்டு உணருங்கள்

உங்கள் விரலை நோட்டின் மேல் வைத்து நகர்த்துங்கள். அது தாளின் அச்சாக்க நிகழ்முறையின் விளைவாலும் தாளின் தனித்துவமான அமைப்பாலும் சற்று

### நோட்டை சாயுங்கள்

நோட்டை சாய்த்து, கீழ் வலது மூலையில் உள்ள எண்களில் உள்ள மை நிறம் மாறுவதைப் பாருங்கள். நடப்பு பாணியில் உள்ள நோட்டுகளில், நிறம் தாமிரத்திலிருந்து பச்சையாக மாறும்.

- நிறம் மாறும் மை, $10 மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள நோட்டுகளில் தோன்றுகிறது.
- நடப்பு பாணி $100 நோட்டில் கூடுதலாக இரண்டு பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. நோட்டை சாய்த்து இவற்றைச் சோதிக்கலாம்: மைப்புட்டியில் உள்ள ஒரு நிறம் மாறும் மணி, ஒரு 3-டி பாதுகாப்பு நாடா. 3-டி பாதுகாப்பு நாடாவில் மணிகளின் படங்களும் 100-களும் உள்ளன. நீங்கள் நோட்டை சாய்க்கும்போது இவை அசையும்.

### வெளிச்சத்தில் வைத்துச் சோதியுங்கள்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, நீரோட்டக்குறியும் பாதுகாப்பு நூலும் நோட்டின் முன்னும் பின்னும் தெரிகிறதா என்று சோதியுங்கள்.

- ஒவ்வொரு $5 மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள நோட்டிலும் பாதுகாப்பு நூல் வெவ்வேறு இடங்களில் இருக்கும்.
- $10, $20, $50, $100 நோட்டுகளில் உள்ள நீரோட்டக்குறிகள் நோட்டின் முன்பக்கம் உள்ள உருவப்படத்துடன் பொருந்த வேண்டும். $5 நோட்டில் எண் 5 நீரோட்டக்குறிகள் இருக்கும்.

நடப்பு மற்றும் பழைய பாணி அமெரிக்க நோட்டுகளுக்குச் சான்றளிப்பது பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும் பயிற்சி வளங்களுக்கும் **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை புரியுங்கள்.

உங்கள் அமைப்பின் கள்ள நோட்டுத் தெரிவிப்புச் செயல்முறைகளை அறிந்துவைத்திருங்கள், நீங்கள் கையாளும் நோட்டு உண்மையான அமெரிக்க டாலர் நோட்டுதானா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால் அந்தச் செயல்முறைகளைப் பின்பற்றுங்கள். உங்கள் மேலாளருக்குத் தெரியப்படுத்துவது, உங்கள் இழப்புத் தடுப்புப் பிரதிநிதிக்குத் தெரியப்படுத்துவது, அல்லது உங்கள் உள்ளூர் சட்ட அமலாக்க அமைப்பை அழைப்பதும் செயல்முறைகளில் அடங்கலாம்.

இந்தக் குறிப்புதவி அட்டையை வெட்டி எடுத்து நடுவில் மடியுங்கள், அமெரிக்க டாலர் நோட்டுக்குச் சான்றளிப்பது குறித்த ஒரு விரைவு வழிகாட்டலுக்கு அதைப் பயன்படுத்த அருகில் வைத்திருங்கள்.

ஒரு நோட்டு உண்மையானதா என்று தீர்மானிக்கச் சிறந்த வழி, அதன் பாதுகாப்பு அம்சங்களை நம்பியிருப்பதுதான். நீங்கள் ஒரு கள்ள நோட்டைப் பெற்றிருப்பதாக நினைத்தால், உங்கள் மிக அருகில் உள்ள அமெரிக்க உளவு அமைப்பு (**U.S. Secret Service**) கள அலுவலகத்திற்கு தெரியப்படுத்துங்கள் அல்லது **uscurrency.gov/report-counterfeit** என்ற வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள்.



அதில் “**For Motion Picture Use Only**” (திரைப்படப் பயன்பாட்டுக்கு மட்டுமே) என்ற சொற்கள் இருந்தால் அல்லது “**Replica**” (நகல்) என்ற சொல் இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.



அதில் வெளிநாட்டுக் கையெழுத்து இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.

## எளிதாகக் கண்டுபிடிக்கத்தக்க கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிக்க உதவிக்குறிப்புகள்

நீங்கள் நோட்டைப் பெறும்போது விரைவாக ஒரு பார்வை பாருங்கள்.

U.S. CURRENCY EDUCATION PROGRAM

U.S. CURRENCY EDUCATION PROGRAM

# இது உண்மை நோட்டா? உங்கள் நோட்டை அறியுங்கள்.

### தாளைத் தொட்டு உணருங்கள்

உங்கள் விரலை நோட்டின் மேல் வைத்து நகர்த்துங்கள். அது தாளின் **D;d;ekdk** நிகழ்முறையின் விளைவாலும் தாளின் தனித்துவமான அமைப்பாலும் சற்று சொரசொரப்பாக இருக்கும்.

### நோட்டை சாயுங்கள்

நோட்டை சாய்த்து, கீழ் வலது மூலையில் உள்ள எண்களில் உள்ள மை நிறம் மாறுவதைப் பாருங்கள். நடப்பு பாணியில் உள்ள நோட்டுகளில், நிறம் தாமிரத்திலிருந்து பச்சையாக

### வெளிச்சத்தில் வைத்துச் சோதியுங்கள்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, நீரோட்டக்குறியும் பாதுகாப்பு நூலும் நோட்டின் முன்னும் பின்னும் தெரிகிறதா என்று சோதியுங்கள்.

நடப்பு மற்றும் பழைய பாணி அமெரிக்க நோட்டுகளுக்குச் சான்றளிப்பது பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும் பயிற்சி வளங்களுக்கும் **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை புரியுங்கள்.